S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE வெள்ளி ஜனவரி 23 * 2026 * மலர் -1 * இதழ்-234* VOL-1 * ISSUE-234 விலை ரூ.3 * பக்கம் -4

## சட்டசபைக் கூட்டத்தில்

# எடப்பாடி புகாருக்கு ஸ்டாலின் கடும் பதிலடி!

சென்னை, ஜன.23

தமிழக சட்டசபையின் 3–ஆவது நாள் கூட்டம் இன்று நடந்தது. இதில் அரசு ஊழியர்களின் போராட்டம் தொடர்பாக தி.மு.க.வுக்கும், அ.தி.மு.க.வுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. எடப்பாடியின் புகார்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காட்டமாக பதிலளித்தார். உங்களைப் போல நாங்கள் அரசு ஊழியர்களை சிறையில் அடைக்கவில்லை என்றும், அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பது அ.தி.மு.க.வுக்கு பிடிக்கவில்லை என்றும் குறிப்பிட்டார். தமிழக சட்டசபைக் கூட்டம் நேற்று முன்தினம் தொடங்கியது. முதல்நாளில் ஆளுநர் உரை வாசிக்கப்பட்டது. நேற்று மறைந்த உறுப்பினர்களுக்கு இரங்கல் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. இன்று 3–ஆவது நாள் நிகழ்ச்சிகள் தொடங்கின. முதலில் கேள்வி நேரம் அமைந்தது. அதன் பிறகு கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் தொடங்கியது.

அதன் ஒரு அங்கமாக அ.தி.மு.க. உறுப்பினர் முன்னாள் அமைச்சர் பி.தங்கமணி பேசினார். அப்போது அவர் பேசியதாவது:–

திமுக அளித்த தேர்தல் வாக்குறுதிகள் குறித்து ஆளுநர் உரையில் இருக்கும் என எதிர்பார்த்தேன். ஆனால் எதுவுமே இடம் பெறவில்லை. இதில் தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் என சொல்கிறார்கள் ஆனால் தமிழகமே போராட்டக்களமாக மாறிவருகிறது. அரசு ஊழியர்கள் தொடர்ந்து போராடி வருகிறார்கள், குடும்பம் குடும்பமாக போராடி வருகிறார்கள். இவ்வாறு அவர் பேசினார். முதல்வர் ஸ்டாலின்:

அரசு ஊழியர்கள் போராட்டம் மிகுந்த அக்கறையோடு கவனிக்கப்பட்டு வருகிறது. திமுக ஆட்சியில் அரசு ஊழியர்கள் கோரிக்கைகளை தொடர்ந்து பரிசீலித்து வருகிறோம். இருந்த போதிலும் அவர்களின் போராட்டம் கைவிட வேண்டும் என எண்ணி அமைச்சர் தொடர்ச்சியாக அவர்களை அழைத்து பேசி வருகிறார். அரசு ஊழியர்களின் போராட்டத்தை வேடிக்கை பார்க்க மாட்டோம். எதிர்க்கட்சி தலைவர் முதலமைச்சராக இருந்தபோது அரசு ஊழியர்களின் சம்பளம் குறித்து கொச்சைப்படுத்தி பேசியதை நாடு மறந்துவிடவில்லை.

எடப்பாடி பழனிசாமி:

தி.மு.க.வைப் போல் ஏமாற்றி நாங்கள் வாக்குகளை பெறவில்லை. தேர்தல் வாக்குறுதியான பழைய ஓய்வூதிய திட்டத்தை எங்கு நிறைவேற்றினீர்கள்? அரசு ஊழியர்களின் கோரிக்கை நிறைவே ற்றவில்லை. அரசு ஊழியர்களின் வாக்குகளை பெற்றுதான் ஆட்சிக்கு வந்துள்ளீர்கள்.

முதல்வர் ஸ்டாலின்:

23 ஆண்டுகள் பிரச்சினையை தீர்த்து வைத்துள்ளோம். அரசு ஊழியர் சங்கங்கள் எல்லாம் என்னுடைய அறைக்கு நேரில் வந்து இனிப்பு ஊட்டிய காட்சி அனைவரும் அறிந்ததே.

எடப்பாடி பழனிசாமி:

உங்களுக்கு சாதகமான சங்கங்கள் மட்டுமே இனிப்பு ஊட்டினார்கள்.

அனைத்து சங்கங்களும் வரவில்லை.

முதல்வர் ஸ்டாலின்:

போராட்டங்கள் பல இடங்களில் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் அவற்றை நாங்கள் வேடிக்கை பார்த்து கொண்டிருக்கவில்லை.

அ.தி.மு.க. ஆட்சியைப் போல நாங்கள் அரசு ஊழியர்களை இரவோடு இரவாக கைது செய்யவில்லை. சிறையிலும் அடைக்கவில்லை. அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பது அ.தி.மு.க.வுக்கு பிடிக்கவில்லை. அரசு ஊழியர்களின் கோரிக்கைகள் கண்டிப்பாக நிறைவேற்றப்படும். அவர்களின் கோரிக்கைகள் நிச்சயமாக நிறைவேற்றப்படும். அடுத்தும் தி.மு.க. ஆட்சி தான். அமைச்சர் அன்பில் மகேஷ்:

15 முறை அரசு ஊழியர்களை அழைத்து பேசிய ஒரே முதல்வர் மு.க.ஸ்டாலின் தான். பணியாளர்களை ஒரே கையெழுத்தில் வீட்டுக்கு அனுப்பியது யார் என்பதை அரசு ஊழியர்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். தி.மு.க. 2.0 வரும் போது மேலும் பலதிட்டங்களைசெயல்படுத்த உள்ளோம்.

அரசு ஊழியர்களை அழைத்துப் பேசும்போது முதலில் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தை செயல்படுத்தியதற்கு நன்றி எனக்கூறி தான் பேச ஆரம்பிக்கின்றனர்.

அமைச்சர் எ.வ.வேலு:

தமிழ்நாடு உறுதி அளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டம் செயல்படுத்தியதற்காக அரசு ஊழியர்கள் பாராட்டு விழா நடத்த வேண்டும் என முதலமைச்சரிடம் தேதி கேட்டுள்ளனர்.

எடப்பாடி பழனிசாமி:

பழைய ஓய்வூதிய திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்பதே கோரிக்கையாக வைக்கப்பட்டது. பல சங்கங்கள் இதனை எதிர்க்கிறார்கள். அதுவே நிதர்சனமான உண்மை. இவ்வாறு விவாதம் நடந்தது.







தலைமைச் செயலகத்தில், பதிவுத்துறையின் ஸ்டார் 3.0 திட்டத்தின் கீழ், காகிதமில்லா ஆவணப்பதிவு, நேரடி வருகையில்லா ஆவணப்பதிவு, தானியங்கி பத்திர உருவாக்கம், மறு விற்பனையாகும் அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு கட்டடக் களப்பணியின்றி ஆவணங்களை அன்றே திரும்ப வழங்கும் திட்டம், சொத்து தொடர்பான பரிவர்த்தனைகளை எளிய முறையில் வில்லங்கச்சான்றில் தேடுதல் உள்ளிட்ட 18 சேவைகள் உள்ளடக்கிய செயல் திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் ஷில்பா பிரபாகர் சதீஷ், பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், ஆகியோர் கலந்து கொண்டனர்.



அ.தி.மு.க., பா.ஜ.க. இடையே தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தைக்காக சென்னையில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை மத்திய அமைச்சர் பியூஸ் கோயல் சந்தித்து பூங்கொத்து கொடுத்த காட்சி.



திருக்குறுங்குடி வனப்பகுதியில் வனச்சரகர் யோகேஷ்வரன் தலைமையில் நடைபெற்ற கணக்கெடுப்பில் சிறுத்தையின் கால்தடத்தை வனத்துறையினர் கண்டறிந்தனர்.



ஊட்டி தாவரவியல் பூங்காவில் உள்ள கண்ணாடி மாளிகையில் கடும் பனிப்பொழிவின் காரணமாக பூத்து குலுங்கிய பல வண்ண மலர்கள் கருகி உள்ளதை படத்தில் காணலாம்.

# போலீசார் பேட்டி அளிக்க கட்டுப்பாடுகள் விதிப்பு!

## உச்சநீதிமன்றம் உத்தரவு!!



புதுடெல்லி, ஜன. 23

செய்தியாளர்களுக்கு போலீஸார் பேட்டி அளிப்பது தொடர்பான பிரத்யேக கொள்கையை வகுக்கும்படி, மாநில அரசுகளுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உச்சநீதிமன்றத்தில் இதுதொடர்பான மனுக்கள் நீதிபதிகள் எம்.எம்.சுந்தரேஷ், என்.கோடீஸ்வர் சிங் ஆகியோரைக் கொண்ட அமர்வு முன் விசாரணைக்கு வந்தன. அப்போது வழக்கில் உதவி செய்ய உச்சநீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட மூத்த வழக்கறிஞர் கோபால் சங்கர நாராயணன், போலீஸார் பேட்டியளிப்பது தொடர்பாக தேசிய மற்றும் சர்வதேச அளவில் கடைபிடிக்கும் வழக்கங்கள் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட அறிக்கையை தாக்கல் செய்தார்.

அதை பரிசீலித்த நீதிபதிகள், கோபால் சங்கரநாராயணன் தாக்கல் செய்த அறிக்கையை ஆய்வு செய்து, போலீஸார் பேட்டியளிப்பது தொடர்பான கொள்கையை மாநில அரசுகள் வகுக்க வேண்டும் என உத்தரவிட்டனர். உச்சநீதிமன்ற உத்தரவை இணையதளத்தில் 2 வாரத்திற்குள் பதிவேற்ற பதிவாளருக்கு உத்தரவிட்டு, அதன் நகல் கிடைத்த 3 மாதங்களுக்குள் மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினர்.



## திருப்பூரில் பரபரப்பு:

# கவிஞர் வைரமுத்து நிகழ்ச்சியில் காலணி வீச்சு!

திருப்பூர்,ஜன.23

திருப்பூர்மாவட்ட ஆட்சியர்அலுவலகம் அருகேஇன்றுகாலை50வயதுமதிக்கத்தக்க பெண்ஒருவர்திடீரெனசாலையில்அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டார் இதனால் அப்பகுதியில் போக்குவரத்து பாதிப்பானது ஏற்பட்டது தொடர்ந்து அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் பெண்மணியை அங்கிருந்து அப்புறப்படுத்தினர்

தொடர்ந்து அவரிடம் நடத்தி விசாரணையில் அந்த பெண்மணி பெயர் ஜெயா என்பதும் அவர் மனநலம் பாதிக்கப்பட்ட நபர் என்பதும், தனது கோரிக்கைகளை எந்த அரசும் நிறைவேற்றவில்லை என அடிக்கடி இது போன்று நிகழ்வுகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவித்தனர். இந்த நிலையில் கொங்கு கலை இலக்கிய பண்பாட்டுப் பேரவை தொடக்க விழா நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக,கவிப்பேரரசுவைரமுத்து திருப்பூர் வந்தார் அவருக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே வழக்கறிஞர்கள் சங்கத்தினர் மாலை அணிவித்து வரவேற்பு அளித்தனர் அப்பொழுது தர்ணாவில் ஈடுபட்ட அந்த மனநலம் பாதிக்கப்பட்ட பெண்மணி திடீரென தான் காலில் அணிந்திருந்த செருப்பை கழட்டி வைரமுத்துவிற்கு வரவேற்பு அளித்த கூட்டத்தின் மீது வீசி உள்ளார்நல்வாய்ப்பாகசெருப்புவைரமுத்து மீது படாமல் தள்ளி விழுந்தது இதனால் அங்கு பரபரப்பு நிலவியது தொடர்ந்து வழக்கறிஞர்கள் வைரமுத்துவை பாதுகாப்பாக நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்கு அனுப்பி வைத்தனர்.

## கடன் பிரச்சனையால் விபரீதம்:

# விஷம் குடித்து காங்கிரஸ் ஒன்றிய கவுன்சிலர் தற்கொலை!

கடையம், ஜன. 23–

கடையம் யூனியன் காங்கிரஸ் கவுன்சிலர் கடன் பிரச்சனையால் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார்.

தென்காசி மாவட்டம் கடையம் செக்கடி தெருவை சேர்ந்தவர் முருகன்மகன்மாரிகுமார்(35). காங்கிரஸ் பிரமுகரான இவரது முதல் மனைவி பிரிந்து சென்றுவிட்டார். அதையடுத்து 2–வதாக திருமணம் முடிந்து மனைவியும், ஒரு ஆண், ஒரு பெண் குழந்தையும் உள்ளனர். மாரிகுமார் கடையம் யூனியன் 11–வது வார்டு காங்கிரஸ் கவுன்சிலராக இருந்து வந்தார். இதனிடையே இவரது தந்தை அங்குள்ள பஜாரில் நகைக்கடை நடத்தி



வந்துள்ளார். அவர் காலமாகிவிட்ட நிலையில் தொழில் நஷ்டம் காரணமாக கடையை மூடிவிட்டதாக கூறப்படுகிறது. தற்போது கடன் காரணமாக மாரிகுமார் மனஉளைச்சலில் இருந்துள்ளார்.

இந்த நிலையில் நேற்று திடீரென மாரிகுமார் விஷத்தைகுடித்துமயங்கி விழுந்தார். அவரை அக்கம் பக்கத்தினர் மீட்டு சிகிச்சைக்காக பாளை அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி இன்று காலை மாரிகுமார் பரிதாபமாக இறந்தார். இதுகுறித்து கடையம் போலீசார் வழக்குபதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம் மற்றும் உள்வட்டம், பருவதனஅள்ளி கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்புத்திட்ட முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர்ரெ. சதீஸ், பயனாளிகளுக்கு பல்வேறு துறைகளின் சார்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் தருமபுரி வருவாய் கோட்டாட்சியர் இரா.காயத்ரி, பென்னாகரம் பேரூராட்சி தலைவர்வீரமணி, பென்னாகரம் வட்டாட்சியர் சண்முகசுந்தரம் உள்ளிட்ட அரசு துறை அலுவலர்கள் மற்றும் இந்நாள், முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.



## தமிழ்நாடு வருவாய் சங்கங்கள் கூட்டமைப்பு சார்பில்

# 9 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி வருவாய் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் தர்ணா போராட்டம்!

சேலம், ஜன. 23

தமிழ்நாடு வருவாய் சங்கங்கள் கூட்டமைப்பு, சேலம் மாவட்ட மையத்தின் சார்பில், தங்களது 9 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி, மாநிலம் தழுவிய, மாவட்ட தலைநகரங்களில் உள்ள, வருவாய் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில், மாபெரும் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்தில், அரசு ஊழியர் சிறப்பு பணி பாதுகாப்பு சட்டத்தை உடனே இயற்ற வேண்டும். ஊதியம் மற்றும் தனி ஊதியம், காலம் முறை ஊதியம் வழங்க வேண்டும். தமிழ்நாடு அரசு புதியதாக அறிவித்த உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தில் உள்ள 10% பங்களிப்பை ரத்து செய்ய வேண்டும். கருணை அடிப்படை பணி நியமனத்திற்கான உச்சவரம்பை 25% ஆக நிறைவேற்ற வேண்டும். ஒப்பந்த மற்றும் தற்காலிக தொகுப்பு புதிய பணி நியமனங்களை முழுமையாக ரத்து செய்ய வேண்டும். தற்போதுள்ள அனைத்து ஒப்பந்த பணியாளர்களையும் நிரந்தர அடிப்படையில் பணி வழங்கிட வேண்டும். பேரிடர் மேலாண்மை துறையில் உள்ள காலிப் பணியிடங்களை ஊதியத்தின் அடிப்படையில் நிரப்பிட வேண்டும். தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகளில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கிராம நிர்வாக அலுவலர்களின் கல்வித் தகுதியை பட்டப் படிப்பாக நிர்ணயம் செய்ய வேண்டும். என்பது உள்ளிட்ட ஒன்பது அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி அஸ்தம்பட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் மாபெரும் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில், தமிழ்நாடு அரசு வருவாய் அரசு ஊழியர் சங்கங்களின் மாநிலத் துணைத் தலைவர் அர்த்தநாரி, மாவட்ட பொருளாளர் அகிலன், அருள், பிரகாஷ், இளங்கோவன், சுரேஷ், மோகன்ராஜ், மணிவேல், குணசேகரன், செல்லமுத்து, தங்கராஜ், பாபு, ஆனந்த், முருகேசன், பாலகிருஷ்ணன், உள்ளிட்ட 500க்கும் மேற்பட்ட மேற்பட்ட வருவாய்த்துறை சங்கங்களின் கூட்டமைப்பு நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




# தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாதிரி மின்னணு வாக்குப்பதிவு கண்காட்சி; மாவட்ட ஆட்சியர் துவக்கி வைத்தார்!

தென்காசி ஜன.23

தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் செயல்முறை விளக்க மையத்தை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், பொது மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள்,

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் உத்தரவுமற்றும்சென்னை,தலைமை தேர்தல் அலுவலர் அவர்களின் அறிவுறுத்தல் படி விரைவில் நடைபெறவுள்ளதமிழ்நாடுசட்டமன்றபொதுத் தேர்தல், 2026 –இன் போது பொது மக்களுக்கு வாக்குப்பதிவு இயந்திரங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகைக்காக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் செயல்முறைகள் குறித்து தென்காசி, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சார் ஆட்சியர் அலுவலகம், தென்காசி மற்றும் சங்கரன்கோவில், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்களில் நிலையான செயல்முறை விளக்க மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ஜெயச்சந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) மருத்துவர் சுப்புலட்சுமி, மாவட்ட சமூக நல அலுவலர் செல்வி.மதிவதனா மற்றும் தனி வட்டாடசியர் (தேர்தல்) ஹரிஹரன் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஓசூரில் ஸ்ரீ வாசவி அன்னபூர்ணேஸ்வரி அன்னதான, அறக்கட்டளை குழு சார்பில் மூன்றாம் ஆண்டு கவுரவிக்கும் விழா!

## ஏழை எளிய மக்கள், மாற்றுத்திறனாளிகள், பள்ளி மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!!



ஓசூர், ஜன.23

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில், ஸ்ரீ வாசவி அன்னபூர்ணேஸ்வரி அன்னதான மற்றும் அறக்கட்டளைகுழு சார்பில் மூன்றாம் ஆண்டு கவுரவிக்கும் விழா நடைபெற்றது.

முன்னதாக அதிகாலையில் பிரசித்தி பெற்றஸ்ரீ கோட்டை மாரியம்மன் மற்றும் ஸ்ரீ வாசவி மாதா திருக்கோவிலிலும் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதனைத் தொடர்ந்து தனியார் திருமண மண்டபத்தில், அறக்கட்டளையின் நிறுவனத் தலைவர் சம்பத்குமார் தலைமையில் அதன் நிர்வாகிகளான செந்தில் குமார் சரவணன் முரளி மற்றும் வெங்கடேஷ் பாபு உள்ளிட்டோர் இணைந்து கவுரவிக்கும் நிகழ்ச்சியை துவக்கி நடத்தினார்கள்.

குறிப்பாக ஆண்டுதோறும் இந்த அறக்கட்டளையின் சார்பில், ஏழை எளிய மக்கள் மாற்றுத்திறனாளிகள் அந்தணர்கள் பள்ளி மாணவர்கள் உள்ளிட்டோருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகின்றனர்.

அந்த வகையில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், அதிமுக முன்னாள் அமைச்சர் பாலகிருஷ்ணா ரெட்டி, துணை மேயர் சி ஆனந்தய்யா, அதிமுக பிரமுகர்கள் ஜெயபிரகாஷ், ஜெகதீஷ், முன்னாள் நகர மன்றதலைவர்நஞ்சுண்டசாமி உள்ளிட்ட அனைத்துக் கட்சி மற்றும் தன்னார்வல நிறுவனத்தை சேர்ந்தமுக்கிய பிரமுகர்கள் பங்கேற்று, வாழ்வாதாரம் இன்றி யாசகம் செய்து வரும் ஏழை எளிய மக்கள் சுமார் 50க்கும் மேற்பட்டோருக்கு உணவுப் பொருட்களும், அரிசி மூட்டைகள் மற்றும் போர்வைகள் வழங்கினார்கள். இதேபோல அந்தணர்கள் சுமார் 25க்கும் மேற்பட்டோருக்கு தலா ஒரு மூட்டை அரிசி காய்கறிகள் மற்றும் மளிகை பொருட்கள் வழங்கினார்கள். மாற்றுத்திறனாளிகள் கண்பார்வையற்றோர் உள்ளிட்டோருக்கும் அவர்களுக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் ஆடைகள் வழங்கினார்கள்.

மேலும் சுமார் 100க்கும் மேற்பட்ட ஏழை பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் உள்ளிட்ட நல திட்ட உதவிகளை வழங்கினார்கள். இதுபோன்று தொடர்ந்து ஆண்டு தோறும் ஏழை எளியோருக்கு உதவிகள் செய்வதுடன் பல்வேறு திருக்கோயில்களிலும் தொடர் அன்னதானமும் செய்து வரும் அறக்கட்டளை குழுவினர் அரசு மருத்துவமனையில் உள்ள மருத்துவ பயனாளிகளுக்கும் உணவு வழங்க அரசு அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை அப்போது வைத்தனர்.

இவ்வாறு மனிதநேயமிக்க இந்த அறச்செயல்களை சேவைகளாக தொடர்ந்து மேற்கொண்டு வரும் அறக்கட்டளை குழுவினருக்கு நிகழ்ச்சிக்கு வந்திருந்த முக்கிய அழைப்பாளர்கள் மனமார்ந்த பாராட்டுகளை தெரிவித்ததுடன் என்றென்றும் அவர்களுக்கு உறுதுணையாக இருப்போம் எனவும் வாழ்த்துரை வழங்கினார்கள்.



## திருச்செங்கோடு அருகே

# கிணற்றில் தவறி விழுந்த புள்ளிமான்!

## தீயணைப்பு துறையினர் மீட்பு!!

திருச்செங்கோடு, ஜன:23–

திருச்செங்கோடு கைலாசம்பாளையத்தை அடுத்துள்ள ஒடுவம்பாளையம் பகுதியில் ஆடிட்டர் சுப்பிரமணியம் என்பவருக்கு சொந்தமான விவசாய நிலம் உள்ளது. இங்கு நீண்ட நாட்களாக பயன்படுத்தப் படாத நிலையில் ஒரு கிணறு உள்ளது. இன்று காலை தோட்டத்து பக்கம்அதே ஊரைச் சேர்ந்த ஈஸ்வரி என்பவர் வந்தபோது ஏதோ சத்தம் கேட்கவே கிணற்றை எட்டிப் பார்த்தபோது ஒரு புள்ளிமான் கிணற்றுக்குள் கத்திக் கொண்டிருப்பது தெரி யவந்தது.இதுகுறித்து தீயணைப்பு துறைக்கு தகவல் கொடுக்கப்பட்டது. தகவல் அறிந்த தீயணைப்பு நிலைய அலுவலர் கரிகாலன் தலைமையில் விரைந்து வந்த தீயணைப்புத் துறையினர் கிணற்றுக்குள் இறங்கி மானை பாதுகாப்பாக மீட்டு குப்பா ண்டம்பாளையம் பள்ளி வளாகத்தில் வைத்திருந்தனர். கிணற்றுக்குள் விழுந்ததால் மானுக்கு காலில் லேசாக அடிபட்டிருந்தது. பிடிபட்ட மான்குறித்து நாமக்கல் வனத்துறையினருக்கு தகவல் கொடுத்தனர். தகவல் தெரிந்த வனத்துறையினர் வந்து மானை மீட்டுச் சென்றனர்.

# வாணாபுரத்தில் கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் மனு கொடுக்கும் போராட்டம்!

கள்ளக்குறிச்சி, ஜன.23–

கள்ளக்குறிச்சி மாவட்டம், வாணாபுரம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் சங்கம் சார்பில் மனு கொடுக்கும் போராட்டம் நடைபெற்றது.

மாநிலத்தில் சுமார் 40 ஆயிரம் கறிக்கோழி பண்ணைகள் இயங்கி வருவதாகவும், இதில் 4 லட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் இத்துறையில் ஈடுபட்டு வருவதாகவும், ஆனால் தற்போதைய கூலி குறைவால் விவசாயிகள் கடும் நஷ்டத்தை சந்தித்து வருவதாகவும் தெரிவித்தனர்.

கம்பெனிகள் வழங்கும் கூலி ஒரு கிலோவுக்கு ரூ.6.50 முதல் ரூ.8 வரை மட்டுமே இருப்பதாகவும், உற்பத்தி செலவு ரூ.10 முதல் ரூ.15 வரை ஆகும் நிலையில் இது போதுமானதல்ல என்றும் கூறினர். இதனால் பலர் கடன் வலையில் சிக்கி தவித்து வருவதாகவும் தெரிவித்தனர்.இந்த நிலையில், கறிக்கோழி வளர்ப்பு கூலியை ஒரு கிலோவுக்கு ரூ.20 ஆக உயர்த்த வேண்டும், கோழி பண்ணைகளுக்கு இலவச மின்சாரம் வழங்க வேண்டும், விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களுக்காக நலவாரியம் அமைத்து இ.எஸ்.ஐ மருத்துவ வசதி வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

மேலும், கோழி குஞ்சுகளை அரசே வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து வாணாபுரம் வட்டாட்சியர் வெங்கடேசனிடம் மனு அளித்தனர்.

இந்த போராட்டத்தில் சங்கத்தின் மாநில தலைவர் ஏழுமலை, மாவட்ட செயலாளர் ஆறுமுகம், வட்ட செயலாளர் கனகராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





# OPPO India புதிய Reno15 Seriesஐ அறிமுகம் செய்தது – அடுத்த நிலை போட்டோகிராபி அனுபவம்!

சென்னை , ஜன. 23

*OPPO India* நிறுவனம் தனது புதிய *Reno15 Series*ஐ அறிமுகம் செய்துள்ளது, இதில் *Reno15 Pro*, *Reno15 Pro Mini* மற்றும் *Reno15* மாடல்கள் உள்ளன. இந்த புதிய வரிசை, *AI Portrait Camera*, *PureTone Imaging Technology* மற்றும் *Popout* போன்ற முன்னேற்றமான கேமரா வசதிகளுடன், பயணிகளுக்கும் போட்டோகிராபி ஆர்வலர்களுக்கும் அடுத்த நிலை அனுபவத்தை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. *OPPO India* நிறுவனத்தின் கம்யூனிகேஷன்ஸ் ஹெட், கோல்டி பட்நாயக் கூறினார்: "இந்தியாவில் 100 மில்லியனுக்கும் மேற்பட்ட *OPPO* பயனர்கள் உள்ளனர். இன்றைய வாடிக்கையாளர்கள் பிரீமியம் அனுபவங்களை எதிர்பார்க்கிறார்கள்; அதேபோல் நவீன கேமரா சிஸ்டம், அறிவுத்திறன் மிக்க *AI*, தனித்துவமான டிசைன் மற்றும் சிறந்த யூசர் எக்ஸ்பீரியன்ஸ் ஆகியவை அவர்களுக்கு முக்கிய அம்சங்களாகும். *Reno15 Series*ஐ வடிவமைக்கும் போது, இளம் பயணிகளின் வாழ்க்கை முறையும், அவர்களின் பொன்னான தருணங்கள் பதிவு செய்வது போன்ற தேவைகளை கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது." *Reno15 Series*இல் முதல் முறையாக அறிமுகமாகும் *HoloFusion Technology*, போன் திரையில் ஆழமான *3D* லேயர்ஸ் உருவாக்கி ஒளி பிரதேசத்தையும் மென்மையான தெளிவையும் வழங்குகிறது. *OPPO India* நிறுவனத்தின் *MISales* துணை இயக்குநர் திரு. ரெஹான் சித்திக்கி தெரிவித்தார்: "இந்திய இசைக்கலைஞர்களுடன் நெருங்கிய ஒத்துழைப்பின் மூலம் உருவாக்கப்பட்ட *Reno15 Series*, பயனர்களுக்கு மேம்பட்ட கேமரா மற்றும் *AI* வசதிகளுடன் பிரீமியம் அனுபவத்தை வழங்குகிறது. ஒவ்வொரு பயனரின் தினசரி வாழ்க்கையில் இதன் பயன்பாடு உண்மையான பலனை தரும்."

# "பார்வையாளர்கள் — புதுமையாக புதுப்பித்தது": ராஷ்மிகா மந்தனாவுடன் சிக்னிஃபை எகோலிங்க் பிரச்சாரம் அறிமுகம்!




சென்னை, ஜன.23

வீட்டு அழகிய தோற்றத்திற்கு புதிய பரிமாணம் சேர்க்கும் வகையில், சிக்னிஃபை (*Euronext: LIGHT*) நிறுவனம் தனது எகோலிங்க் *BLDC* விசிறிகள் வரிசைக்கான புதிய பிரச்சாரத்தை, நடிகை மற்றும் பிராண்டு தூதுவரான ராஷ்மிகா மந்தனா முன்னிலையில் அறிமுகம் செய்துள்ளது. "பார்வையாளர்கள் — புதுமையாக புதுப்பித்தது" என்ற இந்த பிரச்சாரம், நவீன வாடிக்கையாளர்களின் தினசரி வசதியை மேம்படுத்தும் வகையில், வடிவமைப்பு, ஸ்டைல் மற்றும் செயல்திறன் ஆகியவற்றை ஒருங்கிணைக்கிறது.அழகிய, கனவுலகத் தோற்றமளிக்கும் சூழல்களில் உருவாக்கப்பட்ட இந்த பிரச்சார திரைப்படம், நுணுக்கமான வடிவமைப்பு மற்றும் புதுமையை வெளிப்படுத்துகிறது. பிரச்சாரம் குறித்து சிக்னிஃபை – கிரேட்டர் இந்தியா, ஸ்ட்ராட்டஜி மற்றும் மார்க்கெட்டிங் தலைவர் நிகில் குப்தா, "இன்றைய நுகர்வோர் திறன் மிக்க, வாழ்க்கைமுறை சார்ந்த மற்றும் நிலைத்த தயாரிப்புகளை நாடுகிறார்கள்; அந்த எதிர்பார்ப்புகளை பிரதிபலிப்பதே இந்த பிரச்சாரம்" என்று தெரிவித்தார். ராஷ்மிகா மந்தனா, விசிறிகளின் திறன், செயல்திறன் மற்றும் அழகிய வடிவமைப்பு தன்னை மிகவும் ஈர்த்ததாக கூறினார்.எகோலிங்க் விசிறிகள் வரிசை *BLDC* தொழில்நுட்பத்துடன் *AiroElevate*, *AiroQuad*, *AiroJewel*, *AiroGeometry* உள்ளிட்ட மாடல்களில் கிடைக்கிறது; உயர் வேக செயல்திறன், சிறந்த காற்றோட்டம் மற்றும் 5 ஆண்டு (3+2) உத்தரவாதம் இதன் சிறப்பம்சங்கள். ஹாஷ்டேக் ஆரஞ்ச் நிறுவனத்தின் கருத்தாக்கத்தில் உருவான இந்த பிரச்சாரம், *YouTube*, *Instagram*, *Facebook* உள்ளிட்ட சமூக ஊடக தளங்களில் வெளியாகிறது.

# பத்து வருடங்கள் மற்றும் பல தோல்வியடைந்த IVF முயற்சிகளுக்குப் பிறகு, புதுச்சேரி தம்பதி பெற்றோராகினர்!

NOVA IVF FERTILITY • INDIA'S No.1 SELF-CYCLE EXPERT •

புதுச்சேரி, ஜன.23

புதுச்சேரியை சேர்ந்த தம்பதிகள் கார்த்திக் (43) மற்றும் எ. பிரியா (42) (பெயர்கள் மாற்றப்பட்டவை) திருமணமாகி 10 ஆண்டுகளாக குழந்தையின்மையால் பாதிக்கப்பட்டு வந்தனர். ஒரு *IUI* மற்றும் நான்கு *IVF* சிகிச்சைகள் தோல்வியடைந்ததுடன், மூன்று எக்டோபிக் கருத்தரிப்புகள் மற்றும் ஒரு கருசிதைவும் ஏற்பட்டது. கணவருக்கு ஆண் மலட்டுத்தன்மை மற்றும் விந்தணு குறைபாடு, மனைவிக்கு குறைந்த கருமுட்டை இருப்பு, தரக் குறைபாடு மற்றும் மெல்லிய எண்டோமெட்ரியம் போன்ற சிக்கல்கள் இருந்ததால், பல இடங்களில் கருமுட்டை தானம் பரிந்துரைக்கப்பட்டது. கடைசி முயற்சியாக, தம்பதியினர் புதுச்சேரி நோவா *IVF* கருத்தரித்தல் மையத்தை அணுகி, தங்கள் சொந்த கருமுட்டை மற்றும் விந்தணுக்களையே பயன்படுத்தி சிகிச்சை அளிக்க வேண்டுமென கருத்தரிப்பு நிபுணர் டாக்டர். கே. அம்பிகாதேவி அவர்களை நாடினர். விரிவான பரிசோதனைகளில் இரண்டு முக்கிய காரணங்கள் கண்டறியப்பட்டன—குறைந்த சினைப்பை கருமுட்டை இருப்பு மற்றும் மெல்லிய கருப்பை சவ்வு (எண்டோமெட்ரியம்). இதனைத் தொடர்ந்து, *IVF* தொடங்குவதற்கு முன் 4 மாதங்கள் தனிப்பயனாக்கப்பட்ட முன்சிகிச்சை, எண்டோமெட்ரியம் ஆய்வுக்கான ஈஸ்ட்ரோஸ்கோபி மற்றும் நெருக்கமான கண்காணிப்பு வழங்கப்பட்டது.கருப்பை ஏற்ற நிலைமைக்கு வந்த பிறகு *IVF* மேற்கொள்ளப்பட்டு, சிறப்பு மீடியமில் வளர்க்கப்பட்ட இரண்டு ஆரோக்கியமான கருக்கள் கருப்பைக்குள் மாற்றப்பட்டன. இதன் மூலம் எந்த அசாதாரணங்களும் இல்லாத ஆரோக்கியமான குழந்தை பிறந்தது. "வயது ஒரு காரணிதான்; ஆனால் அது முடிவை தீர்மானிப்பதில்லை" என புதுச்சேரி நோவா *IVF*ன் நிபுணர் டாக்டர். அம்பிகாதேவி தெரிவித்தார். தனிப்பயனாக்கப்பட்ட சிகிச்சையும் நவீன கருத்தரிப்பு அறிவியலும், *selfcycle* முறையில் தம்பதியருக்கு பெற்றோராகும் கனவை நனவாக்கியது.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH

# வாணியம்பாடி அருகே மூதாட்டி கொலை வழக்கில் 14 நாட்களாக போலீசுக்கு போக்கு காட்டி வந்த இளைஞர் கைது!

## மொபைல் லோன் கட்டுவதற்காக கொலை செய்ததாக வாக்குமூலம்!!

வாணியம்பாடி, ஜன.23

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த பெத்தகல்லுப் பள்ளி பகுதியைச் சேர்ந்தவர் நடராஜன் இவரது மனைவி பவுனம்மாள் (வயது 65). இவரது கணவர் உயிரிழந்த நிலையில், இவரது இரு பிள்ளைகளும், திருமணம் ஆகி வெளியூரில் வசித்து வரும் நிலையில், மூதாட்டி அதே பகுதியில் தனிமையில் வசித்து புத்து கோவில் சுங்கச்சாவடி அருகே ஏரிக்கரையோரம் சாராய விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளதாக கூறப்படுகிறது.



இந்த நிலையில் கடந்த 6 ஆம் தேதி தேசிய நெடுஞ்சாலை ஒட்டி உள்ள ஏரிக்கரையோம், உள்ள தனது மாட்டுக்கொட்டைகையிற்கு மூதாட்டி சென்றுள்ளார், அப்போது மாட்டு கொட்டகைக்கு வந்த மர்ம நபர் மூதாட்டியை கொடூரமாக தாக்கி துணியால் கழுத்தை நெறித்து, கொலை செய்துவிட்டு அவர் அணிந்திருந்த 4 சவரன் தங்கநகையைச் கொள்ளையடித்துக் கொண்டு சென்றுள்ளார்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற அம்பலூர் காவல் துறையினர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சியாமளாதேவி கொலை சம்பவம் நடந்த இடத்தில் ஆய்வு செய்து, மூதாட்டியின் உடலை பிரேத பரிசோதனைக்காக வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் வேலூரில் இருந்து மோப்பநாய் சாராவை வரவழைக்கப்பட்டு விசாரணையை தீவிரப் படுத்தினர். இருந்த போதிலும் அதில் எந்த துப்பும் கிடைக்காத நிலையில் மூன்று தனிப்படைகளை அமைத்து மாவட்ட காவல் க ண் கா ணி ப் பா ள ர் சியாமளாதேவி உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில் கடந்த 14 நாட்களாக காவல்துறையினர் பல் வேறு கோணங்களில் விசாரணை மேற்கொண்டு வந்த நிலையில் அதே பகுதியை சேர்ந்த செல்வம் மகன் முருகன் (வயது 22), என்பவரிடம் காவல்துறையினர் பல் வேறு கோணங்களில் விசாரணை மேற்கொண்டனர்.

பின்னர் அவருடைய செல் போன் நம்பரை ஆய்வு செய்த போது அவர் தனியார் கோல்ட் பைனான்ஸ் நிறுவனத்தில் தொடர்பு கொண்டது தெரியவந்தது. அதன் பின்னர் மீண்டும் அவரை நேற்று அழைத்து வந்து போலீசார் கிடுக்கு பிடி விசாரணை மேற்கொண்டதில்.அவர் மூதாட்டியை கொலை செய்தது தெரிய வந்தது.

அதன் பின்னர் அவர் அளித்த வாக்குமூலத்தில் முருகன் எந்த வேலைக்கும் செல்லாமல் மொபைல் ஆப் மூலமாக 5 க்கும் மேற்பட்ட லோன்களை பெற்றதாகவும்,

அதனை கட்டுவதற்காக பல இடங்களில் பணத்தை கேட்டுள்ளார். இருந்தபோதிலும் பணம் கிடைக்காத நிலையில் மூதாட்டி அணிந்திருந்த நகையை பறிப்பதற்காக மூதாட்டியை தொடர்ந்து சென்று மூதாட்டியிடம் நகையை பறிக்க முயன்றுள்ளார். அப்போது சுதாரித்துக் கொண்ட மூதாட்டி கூச்சலிட்டு உள்ளார். இதனால் ஆத்திரமடைந்த இளைஞர் மூதாட்டியை கீழே தள்ளி கொடூரமாக தாக்கி துணியால் கழுத்தை இறுக்கி கொடூரமாக கொலை செய்து மூதாட்டி அணிந்திருந்த நகைகளை திருடி சென்றதாகவும் அதனை வாணியம்பாடி சி.எல்.

சாலையில் உள்ள ஒரு நகை கடையில் ரூபாய் 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்து அதில் வந்த பணத்தில் ஆப் மூலம் லோன் கட்டுவதற்காக 1 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் கட்டியதாகவும் முருகன் வாக்கு மூலம் அளித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து அம்பலூர் காவல்துறையினர் அவர் மீது கொலை வழக்கு பதிவு செய்து திருப்பத்தூர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு சிறையில் அடைத்துள்ளனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பையும் அதிர்ச்சியும் ஏற்படுத்தி உள்ளது.



# மு. தம்பிதுரை எம்.பி. நிதியிலிருந்து ரூ.9 லட்சத்தில் பல்நோக்கு கட்டத்திற்கு பூமி பூஜை!

கிருஷ்ணகிரி, ஜன.23

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒப்பதவாடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பொனத்தூர் கிராமத்தில், அதிமுக கொள்கை பரப்பு செயலாளரும் கிருஷ்ணகிரி ராஜ்ய சபா உறுப்பினருமான மு. தம்பிதுரை நிதியிலிருந்து ரூ.9 லட்சம் மதிப்பீட்டில் பல்நோக்கு கட்டடத்திற்கு பூமி பூஜை நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் . மு. தம்பிதுரை அவர்கள் அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார். விழாவில் பர்கூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சி வி ராஜேந்திரன், ஒன்றிய கழக செயலாளர் ஜெயபால், செந்தில், ஒன்றிய அவைத் தலைவர் நந்தியப்பன், முன்னாள் கூட்டுறவு சங்க தலைவர் சந்திரமோகன், ஜெய கிருஷ்ணன், கிருஷ்ணன், பிரபு, பிரவீன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




சேலம் மாவட்டம் மேட்டூரில் செயல்பட்டு வரும் சன்மார் நிறுவனத்தின் சார்பில், பத்து மாற்றுத் திறனாளிகளுக்கு இலவச பேட்டரி பொருத்திய வாகனம் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலகத்தில், மாவட்ட ஆட்சியர் டாக்டர் பிருந்தாதேவி, சன்மார் நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டு, பத்து மாற்றுத் திறனாளிகளுக்கு பேட்டரி பொருத்திய மூன்று சக்கர வாகனங்களை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் சன்மார் நிறுவனத்தின் அதிகாரிகள் மற்றும் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அதிகாரிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.



# கிருஷ்ணகிரி மாவட்ட பா.ஜ.க. நிர்வாகி ஜே.எம். சந்தூர் ரமேஷ் மாநிலப் பொறுப்பாளராக நியமனம்!

கிருஷ்ணகிரி, ஜன.23

கிருஷ்ணகிரி மாவட்டம் சந்தூர் பகுதியைச் சேர்ந்த பாஜக பிரமுகர் ஜே.எம். ரமேஷ், கட்சியின் மாநில பிரச்சாரப் பிரிவு பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். மாநில அமைப்பாளர் டி.எஸ். பாண்டியராஜன் அளித்த பரிந்துரையின் அடிப்படையில், பாஜக மாநிலத் தலைவர் நைனார் நாகேந்திரன் இந்த நியமனத்தை மேற்கொண்டுள்ளார். இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு சமூக வலைத்தளங்கள் வாயிலாக வெளியிடப்பட்டது. புதிய பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள ஜே.எம். ரமேஷிற்கு கிருஷ்ணகிரி மாவட்ட பாஜக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் நேரிலும், சமூக வலைத்தளங்கள் வாயிலாகவும் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவருக்கு மாநில அளவிலான பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது கட்சி வட்டாரத்தில் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## துணி காயப்போட்டதில் தகராறு:

# வாலிபர் மீது தாக்குதல்; 3 பேர் கைது!

குமாரபாளையம். ஜன, 23–

குமாரபாளையத்தில் துணி காயப்போடும் தகராறில் ஆண்கள் மூவர் கைது செய்யப்பட்டனர்.

ஒரு பெண் தலைமறைவானார்., குமாரபாளையம் பூலக்காடு பகுதியில் வசிப்பவர் தனபால்(30), கூலித் தொழிலாளி. இவரது அருகில் வசிக்கும் ரத்தினவேல், கார்த்திக், பிரபு, விஜயலட்சுமி ஆகிய நால்வர், தனபால் செல்லும் வழியில் கயிறு கட்டி துணி காயப்போட்டு வந்தனர்.

இதனை தட்டிக் கேட்ட தனபால் மீது, நால்வரும் சேர்ந்து அடித்து, உதைத்து உள்ளதுடன், இனி இது பற்றி கேட்டால் கொலை செய்து விடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். பலத்த அடிபட்ட தனபால், குமாரபாளையம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளார். இதுகுறித்து தனபால் குமாரபாளையம் போலீசில் புகார் செய்ய, போலீசார் நேரில் சென்று, ரத்தினவேல், கார்த்திக், பிரபு ஆகிய மூவரை கைது செய்தனர். விஜயலட்சுமி தலைமறைவானார். இது குறித்து குமாரபாளையம் போலீசார் வழக்குபதிவு செய்து, தலைமறைவான பெண்ணை தேடி வருகின்றனர்.

# குமாரபாளையத்தில் பெண் மீது சந்தேகப்பட்டு தாக்குதல்!

குமாரபாளையம். ஜன, 23–

குமாரபாளையத்தில் தகாத உறவு வைத்ததாக கூறி ஒரு பெண்ணை இரு பெண்கள் தாக்கிய பின் தலைமறைவாகினர்.

குமாரபாளையம் பெராந்தர்காடு பகுதியில் வசிப்பவர் பரிமளா(44) கூலித்தொழிலாளி ஜன. 10ல், அதே பகுதியை சேர்ந்தவர் ரேவதி என்ற பெண், பரிமளாவுக்கு தனது கணவனுக்கும் தொ டர்பு இருப்பதாக சந்தேகப்பட்டார்.

இதுப்பற்றி அவதுறாக பேசி, பரிமளா தலைமுடியை பிடித்து, முதுகில் அடித்துள்ளார். இவருக்குதுணையாக, ரேவதியின் தோழி, வசந்தா, என்பவரும் அடித்து விட்டு, கொலை மிரட்டல் விடுத்து தலைமறைவாகினர். இதனால் பாதிக்கப்பட்ட பரிமளா, குமாரபாளையம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இது குறித்து குமா ரபாளையம் போலீசார் வழக்குப்பதிவு செய்து, தலைமறைவான பெண்களை தேடி வருகின்றனர்.



வாணியம்பாடியில் சுயேட்சை நகர்மன்ற உறுப்பினர் உட்பட 50க்கும் மேற்பட்டோர் இந்த வார்டை சேர்ந்தவர்கள் இல்லை அவர்களை நீக்கம் செய்ய வேண்டும் என மனு அளித்ததை தொடர்ந்து நகர்மன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்கள் அதிர்ச்சியில் உள்ளனர்.



## இலங்கை தமிழர் மறுவாழ்வு மையத்தில்

# புதியதாக கட்டப்பட்ட 10க்கும் மேற்பட்ட வீடுகளின் கதவு, கழிவறைகளை சேதப்படுத்திய மர்ம நபர்கள்!

ஆம்பூர் ஜன.23

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த மின்னூர் மற்றும் சின்னபள்ளிகுப்பம் பகுதியில் வசிக்கும், இலங்கை தமிழர்களுக்காக, மின்னூர் பகுதியில், ஒரே இடத்தில் ஒருங்கிணைந்த மின்னூர், மற்றும் சின்னபள்ளிகுப்பம் இலங்கை தமிழர் மறுவாழ்வு மைய குடியிருப்பு, தமிழக அரசு சார்பில், ஏற்கனவே 150 க்கும் மேற்பட்ட வீடுகள் கட்டப்பட்ட நிலையில், தற்போது மேலும் 50க்கும் மேற்பட்ட கட்டப்பட்டு திறப்பு விழாவிற்காக காத்திருக்கும் நிலையில், புதியதாக கட்டப்பட்ட வீட்டின் கதவுகள் மற்றும், மின்சார சாதனங்களை மர்ம நபர்கள் சிலர் உடைத்து சேதப்படுத்தியுள்ளனர், மேலும் திறக்கப்படாத இலங்கை தமிழர்களுக்கான குடியிருப்பை மர்மநபர்கள் சேதப்படுத்தியது தொடர்பாக, இலங்கை தமிழர் மறுவாழ்வு மைய வருவாய் ஆய்வாளர், ஷாலினியிடம் கேட்டபோது, புதியதாக கட்டப்பட்ட வீடுகளை சேதப் படுத்தியவர்கள் குறித்து உரிய விசாரணை செய்து, அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

# நாட்டு துப்பாக்கியுடன் பிடிபட்ட வாலிபர்!

கோபி ஜன.21

கோபி அருகே கொங்கர்பாளையத்தில் நாட்டு துப்பாக்கிகளை பயன்படுத்தி வன விலங்குகள் வேட் டையாடப்படுவதாக பங்க ளாப்புதூர் போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து கொங்கர்பா ளையம் முத்துக்கருப்பன் வீதி யைச் சேர்ந்த கருப்புசாமி (வயது 30) என்பவரின் வீட் டுக்கு சென்று போலீசார் சோதனை நடத்தினர். அப் போது கருப்புசாமி வீட்டுக்குள் ஒரு நாட்டு துப்பாக்கி பதுக்கி வைத்திருந்தது தெரிந்தது. இதையடுத்து அவரிடம் விசாரணை நடத்தியபோது அவர் நாட்டு துப்பா க்கிகளை பயன்படுத்தி வனவி லங்குகளை வேட்டையாடி யது தெரிந்தது. கடந்த 6மாதத் துக்கு முன்பு வனத்துறையினர் ரோந்து சென்றபோது காட்டுக்குள் கிடந்த ஒரு நாட்டு துப்பாக்கியை பறிமுதல் செய்திருந்தனர். அந்த நாட்டு துப்பாக்கியும் கருப்பு சாமியுடையதுதான் என்பது தெரிந்தது. இதையடுத்து போலீசார் கருப்புசாமியை கைது செய்து, அவரிடம் இருந்த நாட்டு துப்பாக்கியை பறிமுதல் செய்தனர். ஏற்கனவே கைப்பற்றப்பட்ட நாட்டு துப்பாக்கி யையும் கோபி கோர்ட்டில் போலீசார் ஒப்படைத்தனர்.

## கிருஷ்ணகிரி, போச்சம்பள்ளி

# ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் உளுந்து, பச்சை பயறு கொள்முதல்!

## மார்ச் 25-ந் தேதி வரை நடக்கிறது!!

கிருஷ்ணகிரி, ஜன.23–

விவசாயிகளின் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்கவும், அவர்களின் வருவாயை பெருக்கவும் தமிழக அரசு அனைத்து முயற்சி களையும் மேற்கொண்டு வருகிறது. உளுந்து மற்றும் பச்சைப்பயறு சாகுபடி செய்த விவசாயிகள் பயன்பெறும் வகையில் அவர்கள் விளைவித்த உளுந்து மற்றும் பச்சைப்பயறு விளைபொருட்களை மத்திய அரசின் நாபெட் நிறுவனம் மூலமாக கொள்முதல் செய்யப்பட உள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு கொள்முதல் இலக்காக உளுந்து 880 மெட்ரிக் டன் மற்றும் பச்சைப்பயறு 80 மெட்ரிக் டன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழக அரசு விவசாயிகளின் நலன் கருதி நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்கு மத்திய அரசின் குறைந்த பட்ச ஆதரவு விலையில் உளுந்து விலை ஒரு கிலோ ரூ.78&க்கும், பச்சைபயறு விலை ஒரு கிலோ ரூ.87.68&க்கும் அடுத்த 3 மாத காலத்திற்குள் கொள்முதல் செய்யப்பட உள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இத்திட்டம் கிருஷ்ணகிரி மற்றும் போச்சம்பள்ளி ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் செயல்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலம் பயன் பெறும் விவசாயிகள் நிலத்தின் சிட்டா, அடங்கல், ஆதார் அட்டை நகல் மற்றும் வங்கிக் கணக்கு ஆகிய விவரங்களுடன் கிருஷ்ணகிரி மற்றும் போச்சம்பள்ளி ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளரை அணுகி பதிவு செய்து கொள்ளலாம். உளுந்து மற்றும் பச்சைப்பயறு கொள்முதல் வருகிற 25.03.2026 வரை நடைபெற உள்ளது. உளுந்து மற்றும் பச்சைப்பயறு விளை பொருட்களுக்கு உரிய தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும். தமிழ்நாடு அரசு உளுந்து மற்றும் பச்சைப்பயறு விவசாயிகளின் நலனிற்காக மேற்கொண்டுள்ள இந்த கொள்முதல் திட்டத்தில் உளுந்து மற்றும் பச்சைப்பயறு விவசாயிகள் அதிக அளவில் கலந்து கொண்டு பயன்பெறலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



# கார், உடமைகளை கொள்ளையடித்த 4 பேர் கைது: துரிதமாக செயல்பட்ட போலீசாருக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பாராட்டு!

ஈரோடு ஜன.23

ஈரோடு தெற்கு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பழைய கரூர் சாலையில், கடந்த 19.01.2026 அன்று இரவு வாடகைக்கு கார் ஓட்டும் அன்சர் அலி என்பவரை மர்ம நபர்கள் நால்வர் வாடகைக்கு வரவழைத்துள்ளனர். பழைய ரயில்வே குடியிருப்பு அருகே கார் வந்தபோது, அங்கு மறைந்திருந்த அந்த கும்பல் அன்சர் அலியைத் தாக்கி அவரிடமிருந்த டொயோட்டா கிளான்ஸா கார், ரொக்கப் பணம் 1000 ரூபாய், வெள்ளி பிரேஸ்லெட் மற்றும் செல்போன் ஆகியவற்றைத் திட்டமிட்டு கொள்ளையடித்துச் சென்றனர். இது குறித்த தகவல் மாவட்ட கட்டுப்பாட்டு அறைக்குத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, கொள்ளையடிக்கப்பட்ட காரின் எண் மற்றும் சந்தேக நபர்களின் அடையாளங்கள் மாவட்டம் முழுவதும் உள்ள இரவு ரோந்து போலீசாருக்கு உடனடியாக பகிரப்பட்டு தீவிர வாகன சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது பெருந்துறை விஜயமங்கலம் டோல்கேட் வழியாக கோவைசேலம் தடம் 3ல் சந்தேகத்திற்கிடமான முறையில் கடக்க முயன்ற காரை மறித்த பெருந்துறை தேசிய நெடுஞ்சாலை ரோந்து வாகன உதவி ஆய்வாளர் சத்தியசிங் மற்றும் காவலர் செந்தில் ஆகியோர், காரில் இருந்த 4 எதிரிகளையும் துணிச்சலாகப் பிடித்து கைது செய்தனர். கொள்ளை நடந்த சில மணி நேரங்களிலேயே குற்றவாளிகளைப் பிடித்து கார் மற்றும் உடமைகளை மீட்ட இந்த துரிதமான நடவடிக்கையைப் பாராட்டி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.சுஜாதா, உதவி ஆய்வாளர் சத்தியசிங் மற்றும் காவலர் செந்தில் ஆகியோரை நேரில் அழைத்து பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கி கௌரவித்தார்.

# இன்ஸ்டா நண்பருடன் ஓட்டம் பிடித்ததால் மகளை கழுத்தை அறுத்துக்கொன்ற தந்தை!

## திருப்பூரில் பரபரப்பு சம்பவம்!!

திருப்பூர், ஜன.23

மதுரை மாவட்டம் எழுமலை பகுதியை சேர்ந்தவர் ஆறுமுகம் (வயது 50). இவர், குடும்பத்துடன் திருப்பூர் முருகம் பாளையம் பாறக்காடு பகுதியில் வசித்து வருகிறார். அந்த பகுதியில் உள்ள சாய ஆலையில் தொழிலாளியாக வேலை செய்து வந்தார்.

அவருடைய மகள்சிம்யா (22). இவருக்கும், சாய ஆலையில் வேலை செய்த திருப்பூரை சேர்ந்த உறவினரான பிரேம் குமார் (27) என்பவருக்கும் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. இந்த தம்பதிக்கு 2 வயதில் பெண் குழந்தை உள்ளது. சிம்யா தினமும், அதிக நேரம் செல்போன் பார்த்ததால் கணவன்மனைவிக்கு இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டது.

இந்தநிலையில், கடந்த 2ந் தேதி சிம்யா, திடீரென வீட்டில் இருந்து குழந்தையுடன் மாயமானார். அவர் எங்கே போனார்?, என்ன ஆனார்? என்று தெரியவில்லை. இதனால் அதிர்ச்சியடைந்த சிம்யாவின் குடும்பத்தினர், அவரை பல் வேறு இடங்களில் தேடினர்.

இருப்பினும் அவரை கண்டுபிடிக்க முடியவில்லை. இதனால் மகளை காணவில்லை என்று, திருப்பூர் வீரபாண்டி போலீஸ் நிலையத்தில் ஆறுமுகம் புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத் தினர்.

விசாரணையில், இன்ஸ்டாகிராம் மூலம் பழக்கம் ஏற்பட்ட நண்பருடன் சிம்யா ஓட்டம் பிடித்து கன்னியாகுமரியில் தங்கியிருப்பது தெரியவந்தது. இதைத்தொடர்ந்து போலீசார் அங்கு சென்று சிம்யாவை மீட்டு நேற்று முன்தினம் திருப்பூர் அழைத்து வந்தனர். பின் னர் சிம்யாவுக்கு தகுந்த அறிவுரை கூறி பெற்றோருடன் அனுப்பி வைத்தனர். இந்த நிலையில் நேற்று கர்லை இது தொடர்பாகசிம்யாவுக்கும், அவருடைய தந்தைக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது 'நீ வேறு நபருடன் ஓடிவிட்டதால், எனக்கு பெரிய தலைகுனிவு ஏற்பட்டு விட்டது, நான் வெளியே எப்படி நடமாடுவேன், மானமே போய் விட்டது' என ஆறுமுகம் கோபத்தில் சத்தம் போட்டார். ஒரு கட்டத்தில் ஆத்திரம் அடைந்த ஆறுமுகம், வீட்டில் இருந்த கத்தியை எடுத்து சிம்யாவின் கழுத்தை ஆட்டை அறுப்பது போல் கொடூரமாக அறுத்தும், வயிறு, நெஞ்சுப் பகுதியில் குத்தியும் கொடூரமாக கொலை செய்தார். இதனால் வீடு முழுவதும் ரத்தம் ஆறாக ஓடியிருந்தது. ஆனாலும் ஆறுமுகம், கொலையுண்டு கிடந்த மகள் உடல் அருகே அமர்ந்து அழுது கொண்டிருந்தார். இதற்கிடையே குழந்தையுடன் வெளியே சென்றுவிட்டு வீட்டுக்கு வந்த ஆறுமுகத்தின் மனைவி, அங்கு ரத்த வெள்ளத்தில் மகள் பிணமாககிடந்ததை யும், அவளது உடல் அருகே அமர்ந்து கணவர் அழுது கொண்டிருந்ததையும் பார்த்து அதிர்ச்சி அடைந்தார். மேலும் அவர் கண்ணீர் விட்டுகதறி அழுதார். இவரது அழுகை சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் ஓடி வந்தனர்.

பின்னர் இதுகுறித்து வீரபாண்டி போலீசுக்கு தகவல் கொடுத்தனர். அதன் பேரில் போலீஸ் துணை கமிஷனர் தீபா சத்யன் தலைமையிலான போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து சிம் யாயின் உடலை மீட்டு பிரேத பரிசோத னைக்காக திருப்பூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். பின்னர் ஆறுமு கத்தை பிடித்து விசாரணை மேற்கொண் டனர். விசாரணைக்கு பிறகு, ஆறுமுகத்தை போலீசார் கைது செய்தனர். இன்ஸ்டாகிராம் மோகத்தில், ஆண் நண்பருடன் ஓடிப்போன மகளை கழுத்தை அறுத்து, தந்தையே கொலை செய்த சம்பவம் திருப்பூரில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, நடைபெறவுள்ள 2026 தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தலை முன்னிட்டு, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவியினை பயன்படுத்துவது குறித்த செயல்முறை விளக்க மையங்கள் முதல் அமைக்கப்பட்டுள்ளன. இதன் ஒரு பகுதியாக, பெருநகர சென்னை மாநகராட்சியின் தலைமையிடமான ரிப்பன் கட்டடத்தின் வளாகத்தில் வைக்கப்பட்டுள்ள மின்னணு வாக்குப்பதிவு மற்றும் சரிபார்க்கும் கருவியின் வாயிலாக வாக்காளர்களுக்கு வழங்கப்படும் செயல்முறை விளக்கத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுரபரன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/இணை ஆணையாளர் (கல்வி) க. கற்பகம், உள்ளார்.



## ஜாப்ராபாத் ஊராட்சியில் ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டத்தை அமுல்படுத்த கோரி மனிதநேய மக்கள் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம்!

வாணியம்பாடி, ஜன.23

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த ஜாப்ராபாத் ஊராட்சியில் ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டத்தை அமுல்படுத்த கோரி மனிதநேய மக்கள் கட்சி சார்பில் கோரிக்கை ஆர்ப்பாட்டம் ஆட்டோ ஸ்டான்ட் பகுதியில் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் டி. இக்பால் தலைமை வகித்தார். துணைச்செயலாளர்கள்ஏ.கலீம்பாஷா, பி.முஹம்மதுஅனீஸ், கே.அஷ்வாக் அஹ்மத் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மனிதநேய மக்கள் கட்சிஜாப்ராபாத்கிளைதுணைத்தலைவர் இர்பாஸ் அனைவரையும் வரவேற்றார்.

இதில் சிறப்பு அழைப்பாளர்களாக மாவட்ட தலைவர் வி.ஆர். நஜீர் அஹ்மத், தலைமை கழக பேச்சாளர் சி.கே. சனாவுல்லா, தமுமுக மாவட்ட செயலாளர் V.Z.வர்தா அப்துல் ஷுகூர் ஆகியோர் கலந்துகொண்டுஆர்பாடத்தைதொடங்கி வைத்து ஊராட்சியில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்திட்டத்தைஅமுல்படுத்த வலியுறுத்தி சிறப்புரையாற்றினர்.

ஆர்பாட்டத்தில் தமுமுக, மனித நேய மக்கள் கட்சி நிர்வாகிகள், கிளை நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பகுதி மக்கள் ஆகியோர் கலந்து கொண்டு கூட்டுக் குடிநீர் திட்டத்தை ஊராட்சி பகுதியில் அமுல்படுத்த வலியுறுத்தி தமிழக அரசுக்கு கோரிக்கை வைத்து கோஷங்களை எழுப்பி ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். முடிவில் ஆலங்காயம் ஒன்றிய தமுமுக துணைச் செயலாளர் எம்.நாசீர் அஹ்மத் நன்றி கூறினார்.

### குடியரசு தின விழா அணிவகுப்பு முகாமிற்கு

## கடையநல்லூர் அரசு கலைக் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட மாணவர் தேர்வு!

தென்காசி ஜன.23



தமிழக அரசு சார்பில் சென்னையில் நடைபெறும் குடியரசு தின விழா அணிவகுப்பில் கலந்துகொள்வதற்கான முகாமிற்கு கடையநல்லூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட மாணவர் ஸ்ரீ திருமலை தேர்வு பெற்று 16 முதல் 26.1.26 வரை வி ஐ டி வளாகத்தில் நடைபெறும் பயிற்சியில் பங்கேற்க உள்ளார் பயிற்சிக்குப் பின்னர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு ஆளுநர் கொடியேற்றி வைக்கும் நிகழ்வில் நடைபெறும் நாட்டு நலப்பணித் திட்ட குழு அணிவகுப்பில் கலந்து கொள்ள உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. குடியரசு தின விழாவிற்கான அணிவகுப்பில் கலந்து கொள்வதற்கான பயிற்சி முகாமில் தேர்வு பெற்று உள்ள மாணவர் ஸ்ரீ திருமலை முதல்வர் திருமதி. ரா. ஜெயா ஆங்கிலத் துறைதலைவர் முனைவர் ம. ராம்சங்கர், நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர் பால் மகேஷ் கணிதவியல் துறைதலைவர் முனைவர்.மரகத கோமதி, கணினி அறிவியல் துறைதலைவர் முனைவர்.முருகன், வணிக நிர்வாக துறை தலைவர் முனைவர். பூங்கொடி, வணிகவியல் துறை தலைவர் ஐ. முத்து பிரகாஷ் தமிழ் துறை தலைவர். முனைவர். மாரியம்மாள் உட்பட பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்கள் அனைவரும் பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர்.

## யமஹா மியூசிக் இந்தியா புதிய PSRI தொடர் கீபோர்டுகள் அறிமுகம் !

### இந்தியாவில் வடிவமைப்பு, இந்திய இசைக்காக உருவாக்கம்!!

சென்னை,ஜன.23




யமஹா மியூசிக் இந்தியா இன்று PSRI610 மற்றும் PSRI510 எனும் புதிய PSRI தொடர் போர்ட்டபிள் கீபோர்டுகளை அதிகாரப்பூர்வமாக அறிமுகப்படுத்தியது. இந்திய இசைக்கலைஞர்கள், மாணவர்கள் மற்றும் மேடை கலைஞர்களுக்காக உருவாக்கப்பட்ட இந்த கீபோர்டுகள், இந்தியாவில் வடிவமைக்கப்பட்டு இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்பட்டவை ஆகும். இந்திய பாரம்பரிய இசை முதல் நவீன மற்றும் இந்தியமேற்கத்திய கலவை இசை வரை பல்வேறு பாணிகளை ஆதரிக்கும் வகையில் இந்த தொடர் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த அறிமுகம் குறித்து யமஹா மியூசிக் இந்தியா விற்பனை பிரிவு தலைவர் ரியோஜி மருயாமா கூறுகையில், இந்திய இசை ஒரு கலாச்சார அடையாளம் என்பதையும், இந்திய இசைக்கலைஞர்களுடன் இணைந்து இசை உருவாக்கும் யமஹாவின் நீண்டகால உறுதிப்பாட்டை இந்த PSRI தொடர் பிரதிபலிப்பதாகவும் தெரிவித்தார். மேலும் MISales துணை பொது மேலாளர் திரு. ரிஹான் சித்திகி, இந்திய வாடிக்கையாளர்கள் இசையை கற்றல், பயிற்சி மற்றும் நிகழ்த்தல் ஆகிய அனைத்து நிலைகளிலும் சிறந்த அனுபவம் கிடைக்கும்படி ஒலி தரமும் பயன்பாட்டு எளிமையும் மேம்படுத்தப்பட்டுள்ளதாக கூறினார். சந்தை வளர்ச்சி குறித்து MI Marketing மேலாளர் கஸுகி வத்தனபே பேசுகையில்,

இந்தியா யமஹாவிற்கான முக்கிய வளர்ச்சி சந்தை எனவும், உள்ளூர் இசைக்கலைஞர்களுடன் நெருங்கிய ஒத்துழைப்பில் உருவாக்கப்பட்ட PSRI510 மற்றும் PSRI610 கீபோர்டுகள் அதிக மதிப்புவிலை அம்சங்களுடன் மேம்பட்ட இசை உருவாக்கத்தை எளிதாக்கும் எனவும் தெரிவித்தார். தப்லா, மிருதங்கம், தான்புராகொண்ட Riyaz பயிற்சி, விரிவான Indian Voices & Styles, சக்திவாய்ந்த உள்ளமைக்கப்பட்ட ஆம்ப்ளிபிகேஷன் ஆகிய அம்சங்களுடன், PSRI610 ₹34,990 மற்றும் PSRI510 ₹27,990 விலையில் கிடைக்கின்றன.



கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் கிழக்கு மண்டலம், வார்டு எண்.22க்குட்பட்ட விளாங்குறிச்சி சாலை, சேரன் மாநகர், எச்.பி. பெட்ரோல் பங்க் முன்புறம் பகுதியில், பொது மக்களுக்கும் மற்றும் போக்குவரத்திற்கும் இடையூறாகவும், மாநகராட்சியின் அனுமதியின்றி கேபிள் பதிப்பிற்காக குழி தோண்டிய பி.எஸ்.என்.எல். நிறுவனத்திற்கு ரூ.5.00 இலட்சம் அபராதம் விதித்து உத்தரவிட்டார். உடன் உதவி ஆணையர் ராம்குமார், செயற்பொறியாளர் கருப்பசாமி, உதவி செயற்பொறியாளர்கள் கல்யாணசுந்தரம், எழில், உதவி பொறியாளர்கள் குமார், திருமதி.சாந்தி, ரவிக்கண்ணன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.

## வாணியம்பாடி கருணை இலத்தில் ஆதரவற்ற ஜோடிக்கு வருவாய் கோட்டாட்சியர் முன்னிலையில் திருமணம்!



வாணியம்பாடி, ஜன.23

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி பெருமாள் பேட்டை பகுதியை சேர்ந்தவர் டேவிட் சுபாஷ், விஜிலா டேவிட் தம்பதியினர்.

இவர்கள் கடந்த 32 ஆண்டுகளாக சரணாலயம் டிரஸ்ட் கருணை இல்லம் என்ற பெயரில் ஆதரவற்ற இல்லம் நடத்தி வருகின்றனர். இவருடைய இலத்தின் மொத்தம் 67 பிள்ளைகள் மற்றும் 288 முதியவர்கள் உள்ளனர்.

இந்த நிலையில் கடந்த 2004 ஆம் ஆண்டு வாணியம்பாடி அடுத்த நெகுந்தி சுங்கச்சாவடி பகுதியில் சுஜாதா என்ற 4 வயது சிறுமியை மீட்டு தன்னுடைய இல்லத்தில் வளர்த்தும் கல்வி கொடுத்து கடந்து 2024 ஆம் வாணியம்பாடி தனியார் கல்லூரியில் பி.எஸ்.சி ஊட்டச்சத்து முடித்துள்ளார்.

இதே போல் கடந்த 2024 ஆம் ஆண்டு ஆம்பூர் பேருந்து நிலையம் அருகே ஹைதராபாத் பகுதியை சேர்ந்த ஆதரவற்ற எம்.பி.ஏ பட்டதாரி இளைஞர் புருஷோத்தமன் என்பவரை மீட்டு தன்னுடைய இல்லத்தில் வைத்து கவனித்து வந்துள்ளார்.

இந்த நிலையில் புருஷோத்தமன்(29) மற்றும் சுஜாதாவுக்கும் (26) மாவட்ட ஆட்சியர் சிவசௌந்தரவல்லி அனுமதி பெற்று மாவட்ட சமூக நலத்துறை அலுவலர் சுமதி உத்தரவின் பேரில்

வாணியம்பாடி வருவாய் கோட்டாட்சியர் அஜிதா பேகம் முன்னிலையில் இன்று கருணை இல்ல வளாகத்தில் திருமணம் நடைபெற்றது.

திருமண நிகழ்ச்சியில் வாணியம்பாடி வட்டாட்சியர் சுதாகர், திமுக நகர செயலாளர் வி.எஸ்.சாரதி குமார், தொழிலதிபர் ஆர்.ஆர் வாசு, திமுக நகர துணை செயலாளர் கே.தென்னரசு, நகர மன்ற உறுப்பினர் குபேந்திரன் மற்றும் அரசியல் கட்சியினர், சமூக ஆர்வலர்கள், தொண்டு நிறுவனத்தினர், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். 32 ஆண்டுகளில் கருணை இல்லத்தில் வளர்ந்த 14 பேருக்கு கருணை இல்ல காப்பாளர் டேவிட் சுபாஷ் திருமணம் நடத்திவைத்திருப்பதுகுறிப்பிடத்தக்கது.




திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி அடுத்த பெரிய மூக்கனூர் கிராமத்தில் பொங்கல் விழாவை முன்னிட்டு 55 ஆம் ஆண்டு எருது விடும் திருவிழா நடைபெற்றது. விழாவில் காளைஉரிமையாளர்களுக்கு முதல்பரிசுபஜாஜ்பல்சர், இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு என மொத்தம் 60 பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவில் வருவாய்த்துறை மற்றும் 200க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

## கிருஷ்ணகிரிக்கு வருகை தரும் புதிய கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் எம்.சி. இரகுக்கு வரவேற்பு அளிக்க அனைவரும் கலந்துக் கொள்ள வேண்டும்!

### கிழக்கு மாவட்ட காங்கிரஸ் துணைத்தலைவர் பி.சி.சேகர் வேண்டுக்கோள்!!

கிருஷ்ணகிரி,ஜன.23



கிருஷ்ணகிரி மாவட்ட முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினரும், கிழக்கு மாவட்ட காங்கிரஸ் துணைத் தலைவருமான பி.சி. சேகர் வெளியிட்டுள்ள தனது அறிக்கையில் கூறியிருப்பதாவது, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவராக எம்.சி. இரகு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே உத்தரவின்படி முன்னாள் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திருமதி அன்னை சோனியாகாந்தி, எதிர்கட்சித்தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ராகுல் காந்தி தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெ ருந்தகை, மற்றும் கிருஷ்ணகிரி காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் கே.கோபிநாத் ஆகியோரின்ஒப்புதலோடு நியமிக்கப்பட்டுள்ளார். இதனையடுத்து கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவராக புதியதாக நியமனம் செய்யப்பட்டுள்ள எம்.சி,இரகு முதல்முறையாக வருகின்ற 23ம் வெள்ளிக்கிழமை காலை 10.மணிக்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்திற்கு வருகைத்தர உள்ளார். இதன் முன்னதாக கிருஷ்ணகிரி மாவட்ட எல்லையான ஒப்பதவாடி பகுதியில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டு பர்கூர் நகரில் உள்ள அன்னை இந்திரா காந்தி சிலைக்கு மாலை அணிவிக்கிறார்.

தொடர்ந்து 11.00மணிக்கு கிருஷ்ணகிரி ராசு வீதியில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தியதோடு

கிருஷ்ணகிரி வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள அண்ணல் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

பின்னர், பிற்பகல் 1.00மணியளவில் காவேரிப்பட்டினம் நகரில் உள்ள காமராஜர் சிலைக்கு மாலை அணிவிக்கிறார், தொடர்ந்து 2.00மணிக்கு போச்சம்பள்ளி நகரில் உள்ள ராஜீவ் காந்தி சிலைக்கு மாலை அணிவிக்கிறார். பின்னர், மாலை 4.00மணியளவில் ஊத்தங்கரையில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவிக்கிறார். அதோடு மாலை 5.மணிக்கு மத்தூர் நகரில் உள்ள ராஜீவ் காந்தி சிலைக்கு மாலை அணிவத்து மரியாதை செலுத்த உள்ளார்,

ஆகையால் இந்த நிகழ்ச்சிஅந்தந்த வட்டார தலைவர்கள், நகரத் தலைவர்கள் மாவட்ட நிர்வாகிகள் அனைத்து சார்பாக இயக்க நிர்வாகிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு புதிய மாவட்டத் தலைவர் எம்.சி இரகு அவர்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கும்படி கிழக்கு மாவட்டத் துணைத்தலைவர் பி.சி.சேகர் வேண்டுக்கோள்விடுத்துள்ளார்.



சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உருவாகும் குப்பைகள் குப்பை கிடங்குகளுக்கு செல்லாத நிலையை உறுதிசெய்து, அவற்றை மீண்டும் பயன்படுத்தும் வளமாக மாற்றும் வகையில் 21.01.2026 முதல் 23.01.2026 வரை மாபெரும் குப்பை சேகரிப்பு இயக்கமாக "குப்பைத் திருவிழா" 200 வார்டுகளிலும் நடைபெற்று வருகிறது. இதன் ஒரு பகுதியாக, மாதவரம் மண்டலம், வார்டு27, புழல், ஜி.என்.டி. சாலையில் குப்பைகள் சேகரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.